TNTP010022742026

**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் திருச்சிராப்பள்ளி</u>**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி

2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 04-ம் நாள் சனிக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.176/2026</u>**

**<u>CNR.No. TNTP01-002274-2026</u>**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>கோட்டை சட்டம் மற்றும் ஒழுங்கு<br>காவல் நிலையம், திருச்சிராப்பள்ளி<br>குற்ற எண்: 681/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், தந்தை பெயர் மற்றும் முகவரி | | **<u>எதிரியின் முகவரி</u>**<br>பிரவீன்ராஜ் த/பெ காளிமுத்து,<br>எண்.58, வேதாத்திரி நகர்,<br>இ.பி.ரோடு, திருச்சிராப்பள்ளி. |
| சம்பவ நாள் | | 21.11.2025 |
| புகார் நாள் | | 21.11.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 21.11.2025 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவு | : | எதிரி மீது 123 BNS ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | & | அரசு தரப்பானது எதிரிக்கு எதிராக 123 BNS ன் கீழ் முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என BNSS பிரிவு 258(1)-ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். எதிரி பிணைப்பத்திரம் |

| | | |
|---|---|---|
| | | ஏதும் எழுதிக் கொடுத்திருந்தால் அதனை ரத்து செய்து உத்தரவிடுகிறேன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | சா.பொ.1 முதல் சா.பொ.3 ஐ அழிக்க மருந்து பகுப்பாய்வு துறைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடுகிறேன். |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 04.07.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.A.பாலசுப்பிரமணியன், அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் M.சிவகாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்:I நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.420/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

**<u>1. இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>**

அரசு தரப்பு வழக்கானது, கடந்த 21.11.2025–ம் தேதி காலை 10.00 மணிக்கு திருச்சி மாநகரம், கோட்டை காவல் சரகம், திருச்சி இ.பி ரோடு, லூர்துசாமி பூங்கா அருகே எதிரி பிரவீன்ராஜ் என்பவர் தனது சுய லாபம் கருதி, தமிழக அரசின் உரிமமோ அல்லது அனுமதியோ மருத்துவரின் பரிந்துரையோ இல்லாமல் மனித உடலுக்கும் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய NITRAVET–10mg – 18 மாத்திரைகளை அதிக அளவில் உட்கொள்ளும் போது போதை மற்றும் ஒவ்வாமை ஏற்பட்டு அதற்கு அடிமை ஆகி அதன் காரணமாக மூளை மற்றும் சிறுநீரகங்களின்

செயல்பாடுகள் பாதிக்கப்பட்டு, இதய துடிப்பு குறைந்து மரணம் ஏற்படும் என்பது தெரிந்தும், மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்க கூடிய NITRAVET–10mg – 18 எண்ணிக்கை கொண்ட மாத்திரைகளை தனது சுயலாபம் கருதி சட்டவிரோதமாக பெற்று வியாபாரத்திற்கு பயன்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு 123 BNS ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 420/2025 ஆக நீதித்துறை நடுவர் எண்.I நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் BNSS பிரிவு 230 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது சட்டப்பிரிவு 123 BNS ன் படியான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.176/2026 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் BNSS பிரிவு 249 ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250 உ/இ பிரிவு 251 ன் படி எதிரி மீது சட்டப்பிரிவு 123 BNS கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரியிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.4**

வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1** மற்றும் **சா.பொ.2** வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:**

6.1) அ.சா.1 புகழேந்தி சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்போது திருச்சி மலைக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.11.2025–ம் வருடம் நான். உதவி ஆய்வாளர் குமரவேல், காவலர் மோகன் ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்த பொழுது திருச்சி இ.பி.ரோடு அருகில் உள்ள லூர்துசாமி பூங்கா அருகில் சென்று கொண்டிருந்த பொழுது எங்களை பார்த்த ஒரு நபர் ஓட எத்தனித்த போது அவரை பிடித்து விசாரித்தோம்.

அவரது பெயர் பிரவீன்ராஜ் என்றும், அவர் போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகளை வாங்கி இளைஞர்களுக்கு விற்பதாக சொன்ன தகவலின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் அவரை கைது செய்து விசாரித்து அவரிடம் இருந்து நைட்ரோவிட் 10 MG ஒரு அட்டை மாத்திரைகள், நைட்ரோவிட் 8 MG மாத்திரைகள், சிரஞ்சி–1, வாட்டர் குப்பி–1 ஆகியவற்றை எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் மோகனும் சாட்சியாக இருந்தோம். பின்பு வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலில் உட்படுத்தினார். நாங்கள் அதற்கு உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 மோகன் தலைமை காவலர் தனது சாட்சியத்தில் நான் தற்போது திருச்சி மலைக்கோட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக

பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.11.2025–ம் வருடம் நான் உதவி ஆய்வாளர் குமரவேல், காவலர் புகழேந்தி ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்த பொழுது திருச்சி இ.பி.ரோடு அருகில் உள்ள லூர்துசாமி பூங்கா அருகில் சென்று கொண்டிருந்த பொழுது எங்களை பார்த்த ஒரு நபர் ஓட எத்தனித்த போது அவரை பிடித்து விசாரித்தோம்.

அவரது பெயர் பிரவீன்ராஜ் என்றும், அவர் போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகளை வாங்கி இளைஞர்களுக்கு விற்பதாக சொன்ன தகவலின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் அவரை கைது செய்து விசாரித்து அவரிடம் இருந்து நைட்ரோவிட் 10 MG ஒரு அட்டை மாத்திரைகள், நைட்ரோவிட் 8 MG மாத்திரைகள், சிரஞ்சி–1, வாட்டர் குப்பி–1 ஆகியவற்றை எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் புகழேந்தியும் சாட்சியாக இருந்தோம். பின்பு வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலில் உட்படுத்தினார். நாங்கள் அதற்கு உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 குமரவேல் தலைமை காவலர் தனது சாட்சியத்தில் நான் தற்போது திருச்சி மலைக்கோட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.11.2025–ம் வருடம் நான், உதவி ஆய்வாளர், காவலர் புகழேந்தி ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்த பொழுது திருச்சி இ.பி.ரோடு அருகில் உள்ள லூர்துசாமி பூங்கா அருகில் சென்று கொண்டிருந்த பொழுது எங்களை பார்த்த ஒரு நபர் ஓட எத்தனித்த போது அவரை பிடித்து விசாரித்தோம்.

அவரது பெயர் பிரவீன்ராஜ் என்றும், அவர் போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகளை வாங்கி இளைஞர்களுக்கு விற்பதாக சொன்ன தகவலின்

அடிப்படையில் உதவி ஆய்வாளர் அவரை கைது செய்து விசாரித்து அவரிடம் இருந்து நைட்ரோவிட் 10 MG ஒரு அட்டை மாத்திரைகள், நைட்ரோவிட் 8 MG மாத்திரைகள், சிரஞ்சி–1, வாட்டர் குப்பி–1 ஆகியவற்றை எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகஜரில் நான் கைப்பற்றினேன். அதற்கு அவர்களையே சாட்சியாக கையெழுத்து இட்டார்கள். பின்பு வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலில் உட்படுத்தினேன்.

நான் எதிரிகளுக்கு கொடுத்த சோதனை அறிவிப்பு **அ.த.சா.ஆ.1**. எதிரியிடம் இருந்து கைப்பற்றிய Nitravet மாத்திரைகள் 18 **சா.பொ.1 வரிசை**. சிரஞ்சி **சா.பொ.2,** வாட்டர் குப்பி **சா.பொ.3** ஆகியவற்றை கைப்பற்றியதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.2**. பிறகு எதிரியை கைது செய்து நிலையம் வந்து பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3**. பின்பு கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 91 **அ.த.சா.ஆ.4** மூலம் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு பரிந்துரைத்தேன். சாட்சிகளை விசாரணை செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**தீர்வு:–**

அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், 21.11.2025–ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் இபி ரோடு லூர்துசாமி பூங்கா அருகே சென்ற பொழுது ஆஜர் எதிரி Nitrovet மாத்திரைகள் 18 MG வைத்திருந்ததை உதவி ஆய்வாளர் குமரவேல் அவர்கள் கைப்பற்றி நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் எதிரியை 21.11.2025 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு இபி ரோடு லூர்துசாமி பூங்கா அருகே சென்ற பொழுது ஆஜர் எதிரிகள் Nitrovet மாத்திரைகள் 10 MG வைத்திருந்ததை கைப்பற்றி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், எதிரிகளிடம் இருந்து சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலான சான்று பொருட்களை கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 சாட்சியத்தை கவனிக்கும் பொழுது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் போதை மாத்திரைகளை யார் வாங்கினார் என்றோ எங்கு இருந்து போதை மருந்துகள் வாங்கப்பட்டது என்றோ யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. அவர்கள் சாட்சியத்தை வைத்து இந்த வழக்கில் எதிரியின் மீதான குற்றச்சாட்டு சம்பந்தமாக நிரூபிக்கும் அளவிற்கு எந்தவித சங்கதியும் இல்லை.

மேலும் இந்த வழக்கில் BNS 123 கீழ் மருந்து ஆய்வாளரையோ அல்லது மருந்து பகுப்பாய்வு அறிஞர்களையோ இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் போதை மாத்திரைகள் உட்கொண்டால் மனித உடலுக்கு தீங்கு விளைவித்தது என்பதற்கான ஆவணமோ அல்லது யாரும் பாதிக்கப்பட்டார்களா என்பதற்கான சாட்சியம் யாரும் இல்லை.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களுக்கு தடய ஆய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதில் கைப்பற்றப்பட்ட மருந்து வலி நிவாரணி மருந்து

என கண்டறியப்பட்டுள்ளது. அந்த மருந்து மனித உயிருக்கு ஆபத்து உருவாக்கும் என ஆய்வு அறிக்கையில் கண்டறியப்படவில்லை. ஆகையால் எதிரி வைத்து இருந்ததாக சொல்லும் மாத்திரைகள் போதை மாத்திரைகள் என உறுதியாக சொல்ல முடியாது.

<u>முடிவாக,</u>

அரசு தரப்பானது எதிரிக்கு எதிராக 123 BNS ன் கீழ் முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என BNSS பிரிவு 258(1)–ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். எதிரி பிணைப்பத்திரம் ஏதும் எழுதிக் கொடுத்திருந்தால் அதனை ரத்து செய்து உத்தரவிடுகிறேன்.

சா.பொ.1 முதல் சா.பொ.3 ஐ அழிக்க மருந்து பகுப்பாய்வு துறைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடுகிறேன்.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூலை மாதம் 04**–ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 04.07.2026

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | புகழேந்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.2 | மோகன், தலைமை காவலர் |
| அ.சா.3 | குமரவேல், தலைமை காவலர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | சோதனை அறிவிப்பு |
| அ.த.சா.ஆ.2 | – | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | – | படிவம் 91 |

**<u>சான்று பொருட்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | நைட்ரோவிட்10 எம்ஜி 18 மாத்திரைகள் கொண்ட இரண்டு அட்டை |
| சா.பொ.2 | – | சிரஞ்சி |
| சா.பொ.3 | | வாட்டர் குப்பி |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 04.07.2026